**செப்டம்பர் – 14**

# TNPSC துளிகள்

- புது தில்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு மைதானத்தில் நடைபெற்ற இந்திய தடகளத் தொடரின் இறுதிப் போட்டியில், டான்யா சவுத்ரி 68.35 மீட்டர் தூரம் எறிந்து பெண்களுக்கான குண்டு எறிதலில் புதிதாக இந்திய தேசிய சாதனையைப் படைத்து தங்கப் பதக்கம் வென்றார்.
- கேரளாவின் இடுக்கியில் உள்ள மதிகெட்டான் சோலை தேசியப் பூங்காவில் சுமார் 1,351 மீட்டர் உயரத்தில், பாறைகளில் வளரும் புதிய வகை மரப்பாசியான 'புல்லியா மகாராஜென்சிஸ்' (Buellia maharajensis) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
    - எர்ணாகுளம் மகாராஜா கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழாவைக் குறிக்கும் வகையில், இந்த இனத்திற்கு அக்கல்லூரியின் பெயரால் பெயரிடப்பட்டுள்ளது.
- 18வது பிரிக்ஸ் உச்சிமாநாட்டிற்கு முன்னதாக புது தில்லியில் நடைபெற்ற இருதரப்பு சந்திப்பின் போது, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கு திருக்குறளின் ரஷ்ய மொழி பெயர்ப்பை பிரதமர் நரேந்திர மோடி பரிசளித்தார்.
- ரஷ்ய மற்றும் வட கொரிய எல்லை நகரங்களான காசன் (ரஷ்யா) மற்றும் ரசன் (வட கொரியா) ஆகியவற்றை இணைக்கின்ற முதல் சாலைப் பாலமானது டுமென் ஆற்றின் குறுக்கே திறக்கப்பட்டுள்ளது.
- இந்தியா மற்றும் அமெரிக்கா இடையேயான 22 ஆவது வருடாந்திர இருதரப்பு இராணுவப் பயிற்சியான 'யுத் அபியாஸ்', ராஜஸ்தானின் பிகானேர் மற்றும் உத்தர காண்டின் அவுலி ஆகிய இரண்டு இடங்களில் நடைபெறுகிறது.
- இந்திய கடற்படை மற்றும் ராயல் மலேசிய கடற்படை (RMN) இடையேயான இருதரப்பு கடல்சார் பயிற்சியான சமுத்திர லட்சுமணாவின் 4வது பதிப்பில் பங்கேற்பதற்காக INS மைசூர் மலேசியாவின் லுமுட் வந்தடைந்தது.

# தேசியச் செய்திகள்

## ஆளில்லா விமானப் பாதுகாப்பிற்கான AASHVAST ஆய்வகம்




- இராணுவ ஆளில்லா விமானங்களில் உள்ள மென்பொருள் அச்சுறுத்தல்கள் மற்றும் பாதுகாப்பு பாதிப்புகளைக் கண்டறிவதற்காக, புது தில்லியில் உள்ள DG EME

தலைமையகத்தில் இந்திய ராணுவம் AASHVAST ஆய்வகத்தை அமைத்துள்ளது.

- AASHVAST என்பது மின்னணு அமைப்புகளின் வன்பொருளில் உள்ள பாதிப்புகள் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்த மதிப்பீடு மற்றும் பகுப்பாய்வு என்பதன் சுருக்கமாகும்.
- இது ஆளில்லா விமான மென்பொருட்களில் உள்ள மறைமுக வழிகள், அங்கீகரிக்கப் படாத கூறுகள் மற்றும் மறைக்கப்பட்ட அணுகல் கருவிகளைச் சரிபார்க்கும் இணையத் தொடர்பற்ற ஆய்வகமாகும்.
- மின்னணுப் போர் நுட்பங்களான GPS போலி அடையாளத்தை பயன்படுத்துதல் மற்றும் நெரிசல் ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்கு ஆளில்லா விமானங்கள் காட்டும் எதிர் வினைகளை இதனால் சோதிக்க முடியும்.

## இந்தியாவின் அணு ஆயுதக் களஞ்சியம்




- அமெரிக்க அறிவியலாளர்கள் கூட்டமைப்பின் (FAS) 2026 ஆம் ஆண்டு அறிக்கையின் படி, இந்தியாவிடம் சுமார் 190 அணு ஆயுதங்கள் இருக்கலாம் என மதிப்பிடப் பட்டு உள்ளது.
- இந்தியாவிடம் செயல்பாட்டில் உள்ள ஏவுகணைகளுக்கு 160-க்கும் மேற்பட்ட அணு ஆயுதங்களும், உற்பத்தியில் உள்ள புதிய எறிகணைகளுக்கு சுமார் 30 கூடுதல் அணு ஆயுதங்களும் இருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- 140 முதல் 225 அணு ஆயுதங்களுக்குத் தேவையான இராணுவ-தர புளூட்டோனியத்தை இந்தியா உற்பத்தி செய்திருக்கலாம் என்று FAS மதிப்பிட்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், இந்தியாவிடம் சுமார் 730 கிலோ ஆயுத தரத்திலான புளூட்டோனியம் இருந்ததாக மதிப்பிடப்பட்டது.
- அணு ஆயுதங்களைப் பொறுத்தவரையில், நம்பகமான குறைந்தபட்ச தடுப்பு மற்றும் முதலில் பயன்படுத்துவதில்லை (NFU) என்ற கொள்கையை இந்தியா பின்பற்றுகிறது.

## உள்நாட்டு பேரிடர் எச்சரிக்கை அமைப்பு

- தொலைத்தொடர்பு அமைச்சகமானது, இந்தியாவின் உள்நாட்டு அலைபேசி

ஒளிபரப்பு அமைப்பை (CBS) அதன் முதல் பெரிய அளவிலான தேசிய செயல் விளக்கத்தின் மூலம் அறிமுகப்படுத்தியது.

- தொலைபேசி எண்கள், இணையம், செயலிகள் அல்லது பதிவு போன்ற எவ்விதத் தேவையும் இல்லாமல், கோடிக்கணக்கான அலைபேசிகளுக்கு ஒரே நேரத்தில் புவி-சார்ந்த அவசரகால எச்சரிக்கைகளை CBS அனுப்புகிறது.
- இது சச்செட் (SACHET - தேசிய பேரிடர் எச்சரிக்கை தளம்) அமைப்புடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. மேலும் வெள்ளம், சுனாமி, எரிவாயு கசிவுகள் மற்றும் பிற அவசர காலங்களுக்கான எச்சரிக்கைகளை இதனால் வழங்க முடியும்.
- தொலைத்தொடர்புத் துறை (DoT), தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) மற்றும் மத்திய உள்துறை அமைச்சகம் (MHA) ஆகியவற்றுடன் இணைந்து தொலைத் தொடர்பு மேம்பாட்டு மையம் (C-DOT) இந்த அமைப்பை உருவாக்கியுள்ளது.
- ஜப்பானின் ஜே-அலர்ட் மற்றும் அமெரிக்காவின் வயர்லெஸ் எமர்ஜென்சி அலர்ட்ஸ் ஆகியவற்றைப் போன்று, CBS அமைப்பைப் பயன்படுத்தும் 30க்கும் மேற்பட்ட நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இணைந்துள்ளது.





## இந்தியாவில் மாற்று எரிபொருள் வாகனங்கள்

- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், இந்தியாவின் சில்லறை பயணிகள் வாகனச் சந்தையில் மாற்று எரிபொருள் பயணிகள் வாகனங்கள் (CNG, LPG, கலப்பு மற்றும் மின்சார வாகனங்கள்) முதல் முறையாக பெட்ரோல் வாகனங்களை முந்தியுள்ளன.
- பயணிகள் வாகன விற்பனையில் பெட்ரோல் வாகனங்களின் பங்கு 40.85% ஆக இருந்த நிலையில், மாற்று எரிபொருள் வாகனங்கள் 41.95% பங்கைக் கைப்பற்றியுள்ளன.
- மகாராஷ்டிரா, உத்தரப் பிரதேசம், குஜராத், ஹரியானா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களின் ஒருங்கிணைந்த விற்பனைப் பங்கு 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 59.9% ஆக இருந்ததிலிருந்து, 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 53.7%

ஆகக் குறைந்துள்ளது.

- இதே காலகட்டத்தில், இந்தியாவின் மற்ற பகுதிகளின் விற்பனைப் பங்கு 40.1%லிருந்து 46.3% ஆக அதிகரித்துள்ளது.




## நிலக்கரி துறைக்கான CSR கட்டமைப்பு





- புது தில்லியில், நிலக்கரி அமைச்சகம் மற்றும் கோல் இந்தியா லிமிடெட் (CIL) ஆகியவை நிலக்கரி நிறுவனங்களுக்கான இந்தியாவின் முதல் துறை சார்ந்த விரிவான பெரு நிறுவன சமூகப் பொறுப்பு (CSR) கட்டமைப்பை வெளியிட்டன.
- 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழான சட்டப்பூர்வ CSR விதிகளுக்குப் பிறகு, இந்தியாவில் வெளியிடப்பட்ட முதல் துறை சார்ந்த CSR வழிகாட்டுதல் இது ஆகும்.
- நிலக்கரிச் சுரங்கப் பகுதிகளில் நடைபெறும் CSR நடவடிக்கைகளை வெளிப்படை ஆனதாகவும், அளவிடக்கூடியதாகவும் மற்றும் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டதாகவும் மாற்றுவதற்காக இந்தியப் பெருநிறுவன விவகாரங்கள் நிறுவனம் (IICA) இதை வடிவமைத்துள்ளது.
- 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 135வது பிரிவு, இந்தியாவில் உள்ள CSR விதிகளுக்குச் சட்ட அடிப்படையை வழங்குகிறது.
- தலாசீமியா பால் சேவா யோஜனா திட்டத்தின் கீழ், CIL நிறுவனம் குழந்தைகளுக்கான 1,050க்கும் மேற்பட்ட எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சைகளை முடித்துள்ளது. மேலும் 21 அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகள் மூலம் ஒரு நோயாளிக்கு ₹10 லட்சம் வரை வழங்கியுள்ளது.

- 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் CIL நிறுவனத்தின் நன்ஹா சா தில் (Nanha Sa Dil) முன்னெடுப்பானது, 2 லட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளைப் பரிசோதித்து 1,500-க்கும் மேற்பட்ட இலவச சீரமைப்பு இருதய அறுவை சிகிச்சைகளைச் செய்துள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## உலகின் முதல் ஆற்றல் தீவு

- கடல்சார் காற்றாலை மின்சாரத்தை ஆதரிப்பதற்காக, பெல்ஜியம் அதன் கடற்கரையிலிருந்து சுமார் 45 கி.மீ தொலைவில் உள்ள வட கடலில் உலகின் முதல் செயற்கை ஆற்றல் தீவைக் கட்டி வருகிறது.
- பிரின்சஸ் எலிசபெத் தீவானது, 3.5 ஜிகாவாட் (GW) கடல்சார் காற்றாலைத் திறனைக் கொண்டிருக்கத் திட்டமிடப்பட்டுள்ள பிரின்சஸ் எலிசபெத் மண்டலத்திற்கான ஆற்றல் மையமாகச் செயல்படும்.
- இது கடல்சார் காற்றாலைகளிலிருந்து மின்சாரத்தைச் சேகரித்து, கடலடி வடங்கள் மூலம் பெல்ஜியத்தின் பிரதான நிலப்பரப்பிற்கு கடத்தும்.
- இந்தத் தீவானது பிரிட்டன் மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளுடனான இணைப்புகளையும் கொண்டிருக்கும். இது வட கடலின் கடல்சார் காற்றாலைப் பண்ணைகளை இணைக்கும்.
- இதன் கட்டுமானப் பணிகள் 2027 ஆம் ஆண்டில் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இது 2030 ஆம் ஆண்டிற்குள் முழுமையாகச் செயல்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.





## கொடிய தன்னாட்சி ஆயுத அமைப்புகள் (LAWS)

- ஐ.நா.வின் குறிப்பிட்ட மரபுவழி ஆயுதங்கள் மீதான மாநாட்டின் (CCW) கீழ் கொடிய தன்னாட்சி ஆயுத அமைப்புகளை (LAWS) வரையறுக்கும் வரைவு குறித்து ஜெனிவாவில் 128 நாடுகள் ஒருமித்த கருத்தை எட்டின.
- கொடிய தன்னாட்சி ஆயுத அமைப்புகள் (LAWS) என்பவை, ஒவ்வொரு தாக்குதலுக்கும் மனிதத் தலையீடு இல்லாமல், முன்பே நிரல்படுத்தப்பட்ட அளவுருக்களைப் பயன்படுத்தி இலக்குகளைக் கண்டறிந்து, தேர்ந்தெடுத்துத் தாக்கும் தன்னாட்சி

இராணுவ அமைப்புகளாகும்.

- ❖ இந்த ஒருமித்த வரைவு கட்டுப்படுத்தாதத் தன்மையுடையது. மேலும் இது தன்னாட்சி ஆயுதங்கள் மீதான எதிர்கால சர்வதேச விதிமுறைகள் அல்லது ஒப்பந்தங்களுக்கு ஆதரவளிக்கலாம்.
- ❖ அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் கட்டுப்படுத்தும் வகையிலான சட்டபூர்வமான ஒப்பந்தங்களை எதிர்க்கின்றன. மேலும் அவை கட்டுப்படுத்தாத அணுகுமுறைகள் அல்லது தற்போதுள்ள ஆயுதப் மோதல் சட்டங்களையே ஆதரிக்கின்றன.
- ❖ தன்னாட்சி இலக்கு முறையைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டபூர்வமான ஒப்பந்தத்தை ஆதரிக்கும் நாடுகளில் பிரேசில், அயர்லாந்து மற்றும் நார்வே ஆகியவையும் அடங்கும்.
- ❖ குறிப்பிட்ட மரபுவழி ஆயுதங்கள் மீதான மாநாடானது (CCW), 1980 ஆம் ஆண்டில் ஜெனிவாவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1983 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது என்ற நிலையில் இந்தியா இதில் ஒரு உறுப்பு நாடாகும் மற்றும் LAWS தொடர்பான அரசு வல்லுநர்கள் குழுவின் (GGE) விவாதங்களிலும் பங்கேற்கிறது.





# பொருளாதாரச் செய்திகள்

## கோஸ்டல் லோக்கல் ஏரியா வங்கிக்கு அட்டவணையிடப்பட்ட வங்கி அந்தஸ்து

- ❖ இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம், 1934-இன் இரண்டாவது அட்டவணையில் கோஸ்டல் லோக்கல் ஏரியா வங்கி லிமிடெட் சேர்க்கப்பட்டு, RBI அறிவிப்பின் மூலம் அட்டவணையிடப் பட்ட வங்கி (Scheduled Bank) அந்தஸ்தைப் பெற்றுள்ளது.
- ❖ ஆந்திரப் பிரதேசத்தின் விஜயவாடாவைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் இந்த வங்கி, கடந்த 26 ஆண்டுகளாக இயங்கி வருகிறது.
- ❖ இது தற்போது 12 மாவட்டங்களில் 57 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது.
- ❖ ஆந்திரப் பிரதேசத்தின் விஜயநகரம் மற்றும் பிரகாசம் மற்றும் தெலங்கானாவின் கம்மம் ஆகிய இடங்களுக்கு 13 கூடுதல் கிளைகளுடன் விரிவுபடுத்த சமீபத்தில் இது RBI-யின் ஒப்புதலைப் பெற்றது.

- அட்டவணையிடப்பட்ட வங்கி என்ற அந்தஸ்தானது, புதிய வாடிக்கையாளர்கள் மற்றும் நிறுவன வைப்பீட்டாளர்களை ஈர்க்கவும், நடப்புக் கணக்கு மற்றும் சேமிப்புக் கணக்கு (CASA) வைப்புகளை அதிகரிக்கவும் இந்த வங்கிக்கு உதவும்.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## இந்தியாவின் இணைக்கப்படாத துறை நிறுவனங்களின் தரவு




- இணைக்கப்படாத துறை நிறுவனங்களின் வருடாந்திர ஆய்வின் (ASUSE) 2025 ஆம் ஆண்டு தரவைப் பயன்படுத்தி, தேசியப் புள்ளியியல் அலுவலகம் (NSO) இணைக்கப் படாத விவசாயம் அல்லாத துறைக்கான இந்தியாவின் முதல் மாவட்ட அளவிலான மதிப்பீடுகளை வெளியிட்டது.
- இந்த மதிப்பீடுகள் 770 மாவட்டங்களில் 757 மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. மேலும் நிறுவனங்கள், தொழிலாளர்கள், பெண்களின் பங்கேற்பு மற்றும் மொத்த மதிப்பு கூட்டல் (GVA) குறித்த தரவுகளை உள்ளடக்கியுள்ளது.
- இத்துறையின் நிறுவனங்கள், பணியாளர்கள் மற்றும் GVA ஆகியவற்றில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு முதல் 50 மாவட்டங்களில் உள்ளன.
- 237 மாவட்டங்களில் பெண்கள் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கு பணியாளர்களாக உள்ளனர் அதே நேரத்தில் 25 மாவட்டங்களில் அவர்கள் பாதிக்கும் மேற்பட்டவர்களாக உள்ளனர்.
- 280 மாவட்டங்களில், ஒரு தொழிலாளருக்கான GVA அகில இந்திய சராசரியான


₹1,56,539-ஐ விட அதிகமாக உள்ளது.

- ❖ இந்த ஆய்வு, கிராமப்புற மற்றும் நகர்ப்புற இந்தியா முழுவதும் உற்பத்தி, வர்த்தகம் மற்றும் பிற சேவைகளை உள்ளடக்கியுள்ளது.

# மாநிலச் செய்திகள்

## கங்கை நதி வெள்ளச் சமவெளி எல்லை நிர்ணயம் - உத்தரப் பிரதேசம்

- ❖ உன்னாவ் முதல் பலியா வரையிலான 700 கி.மீ தூரமுள்ள கங்கை நதியின் வெள்ளச் சமவெளி எல்லை நிர்ணயம் செய்யும் பணி 13 மாவட்டங்களில் முடிக்கப்பட்டுள்ளதாக உத்தரப் பிரதேச மாநிலம் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்திடம் (NGT) தெரிவித்துள்ளது.
- ❖ ஆக்கிரமிப்புகள் மற்றும் அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களைத் தடுப்பதற்கு உதவும் வகையில், வெள்ளச் சமவெளிப் பகுதியைக் குறிக்க மொத்தம் 7,350 தூண்கள் நிறுவப்பட்டுள்ளன.
- ❖ யமுனை, ராம்கங்கா, பெட்வா, சுவாவ், தேடி, புத்தி கங்கை, சோலானி மற்றும் கோக்ரி உள்ளிட்ட துணை நதிகளுக்கான வெள்ளச் சமவெளிப் பகுதி எல்லையை வரையறுக்கும் பணியும் முடிக்கப்பட்டுள்ளது.
- ❖ கோமதி, காக்ரா மற்றும் ராப்தி நதிகளின் எல்லையை வரையறுக்கும் பணியை 2027 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதிக்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- ❖ இப்பணியானது, கங்கை நதி அதிகார சபை உத்தரவு, 2016 மற்றும் முந்தைய NGT வழிகாட்டுதல்களைச் செயல்படுத்துவதற்குத் துணைபுரிகிறது.




# முக்கிய தினங்கள்


## தேசிய வனத் தியாகிகள் தினம் 2026 - செப்டம்பர் 11

- ❖ காடுகள் மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாக்கும் பணியில் தங்கள் உயிரை நீத்த வனத்துறையினரை கௌரவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ ராஜஸ்தானில் கெஜ்ரி மரங்களை வெட்டுவதை எதிர்த்து பிஷ்னோய் சமூகத்தினர் போராடிய 1730 ஆம் ஆண்டின் கெஜர்லி தியாகத்தை இந்த நாள் நினைவுகூருகிறது.
- ❖ இந்த இயக்கத்திற்கு அம்ருதா தேவி பிஷ்னோய் தலைமை தாங்கினார். மேலும் இந்தத் தியாகத்தின் போது 360 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

- கெஜர்லி சம்பவமானது சமூகம் சார்ந்த இயற்கை பாதுகாப்பு மற்றும் அரணுடன் தொடர்புடையதாகும்.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு "Remembering Martyrs, Protecting Forests" என்பதாகும்.




## திக்விஜய தினம் 2026 - செப்டம்பர் 11




- 1893 ஆம் ஆண்டில் சிகாகோவில் நடைபெற்ற உலக சமயங்களின் மாநாட்டில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க உரையை இந்த நாள் நினைவு கூருகிறது.

- நரேந்திரநாத் தத்தா என்ற இயற்பெயரைக் கொண்ட சுவாமி விவேகானந்தர், 1863 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் தேதி கொல்கத்தாவில் பிறந்தார்.
- அவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் முதன்மைச் சீடர் ஆவார். மேலும் வேதாந்தம் மற்றும் யோகாவின் முன்னணி நிபுணராக அவர் விளங்கினார்.
- 1893 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் தேதி சிகாகோவில் நடைபெற்ற உலக சமயங்களின் மாநாட்டில் இந்து மதத்தின் பிரதிநிதியாக அவர் உரையாற்றினார்.
- "அமெரிக்க சகோதர சகோதரிகளே" என்ற அவரது தொடக்க வார்த்தைகள் அவரது வரலாற்றுச் சிறப்புமிக்க சிகாகோ உரையுடன் இணைந்தது.
- மத சகிப்புத்தன்மை, உலகளாவிய ஏற்றுக்கொள்ளல், நல்லிணக்கம் மற்றும் அமைதியான சகவாழ்வு ஆகியவற்றை அவரது சிகாகோ உரைகள் சிறப்பித்துக் காட்டின.
- ஆன்மீக வளர்ச்சி மற்றும் மனிதகுலத்திற்கான சேவை ஆகிய இலட்சியங்களின் அடிப்படையில் 1897 ஆம் ஆண்டில் ராமகிருஷ்ண மடத்தை அவர் நிறுவினார்.
- ஜனவரி 12 ஆம் தேதியன்று அமைந்த அவரது பிறந்த நாள், இந்தியாவில் தேசிய இளைஞர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.
- அவர் தனது 39 ஆவது வயதில் 1902 ஆம் ஆண்டு ஜூலை 4 ஆம் தேதி காலமானார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★